Seafood Exporters' Association of Sri Lanka
SEASL

# நீல நீச்சல் நண்டு அறிக்கை இலக்கம் No.4

**ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் *2015***

*இலங்கையின் கடலுணவுச் சங்கத்தின் (SEASL) **நீல நீச்சல் நண்டு அறிக்கையின்** நாலாவது பதிப்புக்கு வரவேற்கின்றோம். FIP (fishery improvement project)- (கடற்றொழில் முன்னேற்ற செயற்றிட்டம்) இலங்கையின் நீல நீச்சல் நண்டு .. கடற்றொழிலின் உயிரினம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்தவற்றின் அந்தஸ்தை முன்னேற்றுவதற்கு பல தொடரான உப செயற்றிட்டங்களை அமுல்படுத்தி நியாயமான முன்னேற்றத்தை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. நிலையான வளமுள்ள கடலுணவுக்கான சர்வதேச பணிமுறை அமைவின்படி 'நிலையானதாக முகாமைப்படுத்தப்படும் கடற்றொழிலுடன் இசைந்துள்ள மட்டத்தில் உயிரினம் மற்றும் சுற்றுச்கூழல் சார்ந்த அந்தஸ்தைப் பராமரிக்கும் கடற்றொழில் குறிப்பான முகாமைத்துவத்தின்மேலும் FIP தொழிற்பட ஆரம்பித்துள்ளது.*

*கடந்த ஆறுமாதங்களாக தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை (National Aquatic Resources Research and Development Agency (NARA)) SLBSC கடற்றொழிலின் உயிரியல் தொகை பற்றி ஒரு வருடமாக விஞ்ஞான ரீதியான கற்கையைப் பூர்த்தி செய்துள்ளது. Dr.யெறேமி பிறின்ஸ் மற்றும் Dr. அட்றியன் ஹொடிக் தொழில்நுட்ப உதவி மற்றும் தைரியத்தையும் வழங்கி FIP க்கு வருகைபுரிந்தனர். ஊவா வெலச பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது இறுதி ஆண்டு ஆராய்ச்சி செயற்றிட்டங்களை பூர்த்தி செய்துள்ளதுடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் (Department of Fisheries and Aquatic Resources (DFAR) ) மற்றும் இரண்டு கடற்றொழில்களிலும் ' மீன்பிடி முயற்சியின் ' முதலாவது மதிப்பீடுகளை பூர்த்தி செய்துள்ளனர். ஆண்டு இறுதியில் சட்டவிரோத ,அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குவிதிப்படுத்தப்படாத (illegal, unreported and unregulated (IUU) ) தமிழ்நாட்டு இழுவைப்படகுகளால் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு எதிராக மீனவர் கூட்டுறவு சமூகங்களின் யூனியன்கள் ( fishermen's cooperative societies' unions (FCSU) ) பிரசாரங்களை ஆரம்பித்தன. இந்தச் செயற்பாடுகள் பற்றியும் அதற்குமேலும் **நீல நீச்சல் நண்டு அறிக்கையின்** இந்தப்பதிப்பில் கண்டுகொள்ள முடியும்.*

## இருப்பின் உயிரியல்சார்ந்த அந்தஸ்தை முன்னேற்றல்



NARA இன் கடல்சார் வளங்கள் முகாமைத்துவப் பிரிவின் தலைமை விஞ்ஞானியான Dr. சிசிறா ஹப்புதந்திறி மற்றும் அவரது பணியணியினரும் 2015 ஆம் ஆண்டில் SLSBC இன் உயிரியல் சனத்தொகையின் NARA இன் வெளிக்கள தரவு சேகரிப்பை பூர்த்தி செய்தனர். கடந்த 12 மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நாலு வந்தடையும் நிலையங்களிலிருந்து 35,000 BSC எடுக்கப்பட்டன. வடமாகாண வெளிக்கள இணைப்பாளரான தேவ சுதர்சன் SEASL's NARA's வெளிக்கள ஆராய்ச்சி நிகழ்ச்சி இணைக்கப்பட்டது.

NARA's வெளிக்கள ஆராய்ச்சி அலுவர்களால் அணியினால் சேகரிக்கப்பட்ட மாதாந்த மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆண் மற்றும் பெண் BSC இன் நீளம் /நிறை தொடர்பு ; வளர்ச்சி ; இறப்பு ; முதிர்ச்சியில் அளவு ; இனப்பெருக்கம் ; முட்டை இடும் காலம் மற்றும் உணவு என்பவற்றை ஆராய்ச்சியிலிருந்து NARA ஆல் ஸ்தாபிக்கப்படும் பிரதான உயிரியல் அளவெல்லை உள்ளடக்குகின்றது.

வங்காள விரிகுடாவில் SLBSC இன் உயிரியல் சனத்தொகையின்மேல் NARA's இறுதி அறிக்கை 2016 இல் மாசி மாத இறுதியில் SEASL க்கு சமர்ப்பிக்கப்படும். NARA's ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கள் –இலங்கையில் முதலாவது வெளியிடப்பட்ட நீல நீச்சல் நண்டுகளின் விஞ்ஞானக் கற்கை – அடுத்த நீல நீச்சல் நண்டு அறிக்கையில் சமர்ப்பிக்கப்படும்.

ஆவணி மாதத்தில் , Biospheric (Pvt) Ltd இன் பணிப்பாளரான Dr. யெறேமி பிறின்ஸ் மற்றும் மேற்கு அவுஸ்திரேலிய மோர்டொக் பல்கலைக்கழக மீன் , கடற்றொழில் ஆராய்ச்சி , Dr. அட்றியன் ஹொடிக் NARA இல் நீண்ட அடிப்படையில் (length based spawning potential )(LBSP).முட்டை ஈனும் வலுவாய்ப்பில் ஒரு தேசிய கருத்தரங்கையும் தொழில்நுட்ப செயலமர்வையும் நடாத்தியது. DFAR இன் கடற்றொழில் முகாமைத்துவ பிரிவின் பணியணியினருடன் அளவு தெரிவுசெய்யும் அறுவடைக் கட்டுப்பாட்டு தந்திரோபாயங்களைப் பற்றி அவர்கள் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றினர். மார்கழி மாதத்தில் நீண்ட அடிப்படையிலான முட்டை ஈனும் வலுவாய்ப்பை உபயோகித்து தரவு குறைந்த கடற்றொழிலில் இருப்பு அந்தஸ்தை மதிப்பீடு செய்வதற்கு உபயோகிக்கப்படும் the BSC வாழ்க்கை வரலாற்று அளவெல்லை மதிப்பீடுகளை முன்னேற்றுவதற்கு Dr. பிறின்ஸ் மற்றும் Dr. ஹொட்றிக் ஆகியோருடன் அதன் இணைப்பை FIP தொடர்ந்தது.



துறைசார் விபர மீளாய்வு மற்றும் BSC விஞ்ஞான கற்கைகளின் பகுப்பாய்வும் முன்னரான LBSP மதிப்பீடுகளில் FIP ஆல் ஒவ்வொரு BSC வாழ்க்கை வரலாற்று அளவெல்லை மதிப்பீடுகளின் ஒரு மீளாய்வுக்கு வழிவகுத்தது பின்வருமாறு :

| வாழ்க்கை வரலாற்று அளவெல்லைகள் | குறியீடு | முன்னையது | மீளாய்வு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| இறப்பு வளர்ச்சி விகிதம் | M/k | 1.50 | 1.34 |
| 50% முதிர்வில் நீளம் | $L_{50}$ | 95 mm | 100 mm |
| 95% முதிர்வில் நீளம் | $L_{95}$ | 135 mm | 135 mm |
| சராசரி உச்ச நீளம் | $L_{inf}$ | 170 mm | 180 mm |
| வயதுடன் இனப்பெருக்கவளம் | β | 3.0 | 3.0 |

Dr. ஹொடிக் அவர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட What'sthecatch' தொடரறா LBSP பிரயோகத்தின் ஒரு சீர்திருத்தப்பட்ட பெயர்ப்பை உபயோகித்து மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் SLSBC கடற்றொழிருக்கான மீளாய்வு செய்யப்பட்ட முட்டையிட்டு இனப்பெருக்க வலுவாய்ப்பு விகிதங்களை உருவாக்குவதற்கு FIP ஆல் இந்த மதிப்பீடுகள் பின்னர் உபயோகப்படுத்தப்பட்டன. இது அதிகமாக பெண் BSC இன் அதிகரிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட சராசரி உச்ச அளவு காரணத்திலாகும். எனினும் ,மன்னார் வளை குடாவிலும் வங்காள விரிகுடாவிலும் நிலையான முகாமை செய்யப்பட்ட இஇ மீன் கடற்றொழிலுக்கான மிகப்பிந்திய SLBSC க்கான இருப்புக்கான SPR பெறுமதிகள் இப்பவும் குறைந்த இலக்கு குறிப்பு புள்ளிகளுக்கு( Lower Target Reference Points (TRP) )மேலே ஆகும்.

| | மன்னார் வளைகுடா BSC கடற்றொழில் | வுங்காள விரிகுடா BSC கடற்றொழில் |
|---|---|---|
| Lower TRP | SPR = 30% | SPR = 30% |
| Upper TRP | SPR = 40% | SPR = 40% |
| இருப்பு அந்தஸ்து 2015 | SPR = 36% | SPR =37% |
| முகாமைத்துவம் | *2016 இல் 'மீன்பிடி முயற்சி ' அதேபோல் இருக்கவேண்டும்* | *'2016 இல் 'மீன்பிடி முயற்சி ' அதேபோல் இருக்கவேண்டும்* |
| மாவட்டங்கள் | புத்தளம் | மன்னார், கிளிநொச்சி , யாழ்ப்பாணம் |



மார்கழி மாதத்தில் மன்னார் மாவட்டத்தில் SLBSC இன் இனப்பெருக்க உயிரியல்மேல் வெளிக்கள வேலையை ஊவா வெலெசபல்கழலக்கழக இறுதி ஆண்டு மாணவியான அஜந்தா அபயகுணவர்தன பூர்த்தி செய்திருந்தார். ஊவா வெலெச பல்கழலக்கழகத்தில் நீரியல் வளங்கள் மற்றும் ஏற்றுமதிப் பயிர் தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி Dr. செபாலிக ஜெயமான்ன அவர்களால் மேற்பார்வைசெய்யப்பட்டது. வங்காள விரிகுடாவில் BSC இனப்பெருக்க உயிரியல் பற்றிய அஜந்தாவின் இறுதி அறிக்கையும் ஆராய்ச்சிக் கட்டுரையும் 2016 பங்குனி மாதத்தில் வெளியிடப்படும். அவவின் கண்டுபிடிப்புகள் அடுத்த நீல நீச்சல் நண்டு அறிக்கையில் சமர்ப்பிக்கப்படும்.

# கடற்றொழிலின் சுற்றுச்சூழல் அந்தஸ்தை முன்னேற்றுதல்



மன்னார் வளைகுடாவிலும் வங்காள விரிகுடாவிலும் இலக்குவைக்கப்படாத மீன் வகைகள் , தீர்க்கமான கடல்சார் உயிர்வாழ்வனமேல் (அதாவது.,*இடையே அகப்பட்டு பிடிபடுபவை*), (உ.ம்., சதுப்பு நில தாவரங்கள், பவளங்கள் மற்றும் கடற்புல் படுக்கைகள்) மற்றும் பரந்த சுற்றுச்சூழல் முறைகள் மேல் BSC கடற்றொழிலின் தாக்கத்தை ஆராய்ச்சி செய்வதும் ஆவணப்படுத்துவதும் BSC கடற்றொழிலின் சுற்றுச்சூழலின் அந்தஸ்தை முன்னேற்றுவதற்கான தீர்க்கமான படிகளாகும்.

2015 இல் மார்கழி மாதத்தில் வங்காள விரிகுடாவில் இலக்கு வைக்கப்படாத வகைகளின்மேல் SLBSC கடற்றொழிலின் தாக்கம் பற்றி UWU இன்னொரு இறுதி ஆண்டு மாணவனான வத்சல அவரது இறுதி ஆண்டு ஆராய்ச்சி செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருந்தார். அவரும் ஊவா வெலெச பல்கலைக்கழகத்தில் மிருக விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் பீடாதிபதி Dr. செபாலிக ஜெயமான்ன அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்டார்.


2016 பங்குனி மாதத்தில் வங்காள விரிகுடாவில் இலக்கு வைக்கப்படாத வகைகளின்மேல் SLBSC கடற்றொழிலின் தாக்கம் பற்றிய வத்சலவின் இறுதி அறிக்கையும் ஆராய்ச்சிக் கட்டுரையும் வெளியிடப்படும். அவரது கண்டுபிடிப்புகள் அடுத்த நீல நீச்சல் நண்டு அறிக்கையில் சமர்ப்பிக்கப்படும்.

# றொழிலின் முகாமைத்துவத்தை முன்னேற்றுதல்

ஒரு புரிந்துகொள்ளக்கூடிய சட்டம் மற்றும் மற்றும் ஒழுங்குவிதிகள் இருப்பதுடன் இலங்கையில் கடற்றொழில் ஆளுகை செய்வதற்கும் முகாமைசெய்வதற்கும் அவை உபயோகிக்கப்படுகின்றன. எனினும் குறிப்பாக SLBSC கடற்றொழிலுக்கு ஒரு தொகுதி சட்டங்களும் பிரமாணங்களும் இன்னமும் அமைக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டில் SLSBC FIP ஆல் இது முன்னேற்றத்துக்காக கையாளப்படவேண்டிய ஒரு பிரதான பகுதியாகும்.



2015 ஆம் ஆண்டில் குறிப்பான ஒரு தொகுதி சட்ட விதிகளையும் ஒழுங்குபிரமாணங்களையும் அமைப்பதை நோக்கி ஒரு முக்கியமான படியை DFAR இன் அலுவலர்களும் பணியணியனரும் எடுத்தனர். மன்னார் வளைகுடாவிலும் வங்காளவிரிகுடாவிம் BSC கடற்றொழிலின் முதலாவது 'மீன்பிடி முயற்சியை' DFAR வெற்றிகரமாக நிறைவேற்றியது. 'மீன்பிடி முயற்சியின்' அளவீட்டின் விளைவுகள் மீனவ சமூகங்கள், கடலுணவுக் கம்பனிகள் மற்றும் NARA ஆகியவற்றுடனும் மாவட்ட மட்டம் மற்றும் கொழும்பிலும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களிலும் பகிரப்பட்டது. ஒவ்வொரு BSC கடற்றொழிலும் 'மீன்பிடி முயற்சியின்' அவர்களின் சொந்த மதிப்பீடுகளை மீனவ சமூகங்கள் நடாத்தின. 2016 ஆம் ஆண்டில் மீனவக் குடும்பங்களுடனும் பணியணியனருடனும் DFAR இனதும் மீனவ கூட்டுறவு அளவீட்டுடனும் விளைவுகள் கலந்துரையாடப்படும். SLBSC கடற்றொழிலுக்குக் குறிப்பாக உள்ள தொகுதி முகாமைத்துவ விதிகளையும் பிரமாணங்களையும் அமைப்பதற்கு இந்தக் கலந்துரையாடல்களின் விளைவுகள் உபயோகிக்கப்படும் .




தமிழ்நாட்டு இழுவைப்படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளால் தொடர்ந்தும் சட்டவிரோத , அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குவிதிப்படுத்தப்படாததுமான (IUU) மீன்பிடித்தல் SLBSC மீன்பிடித்தலின் முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கான FIP இன் முயற்சிகளுக்குத் தடை செய்யும் பிரதான வெளியக தடையாக தொடர்ந்தும் இருக்கப்போகின்றது. இலங்கைக் கடற்பரப்பில் தமிழ்நாட்டு வள்ளங்களால் IUU மீன்பிடித்தல் காரணமாக ஒவ்வொரு கிழமையும் மூன்று நாட்களில் மீன்பிடிப்பதிலிருந்து தடைசெய்யப்படும்போது BSC கடற்றொழில் முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கான படிகள் பற்றி ஆராய்வதற்கு மீனவ குடும்பங்கள் தயங்குகின்றன (வலது பக்கம் பார்க்க). ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி 2015 ஆம் ஆண்டு மூன்று FCSU தலைவர்களால் உயர் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேன்முறையீடு 20 தை மாதம் 2016 வரை பிற்போடப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடித்தலிலிருந்து தமிழ்நாட்டு இழுவைப்படகுகளைத் தடை செய்வதற்கு பொருத்தமற்ற நடவடிக்கை எடுத்தமைக்காக 2015 வைகாசி மாத்தில் இலங்கை மீனவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக மீனவர்களின் மனுவை நிராகரிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு எதிராக இலங்கை மீனவர்கள் மேன்முறையீடு செய்கின்றனர்.

ஆனி மாதத்தில் முகநூல் பக்கம்[1] இலங்கைக் கடற்பரப்பில் தமிழ்நாட்டு வள்ளங்களால் மேற்கொள்ளப்படும் IUU மீன்பிடித்தலுக்கு எதிராக இலங்கை மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு குடிசார் சமூக நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்டது. முகநூல் பக்கம் தமிழ் நாட்டு இழுவைப்படகுகளின் பிரச்சினைகன் பற்றி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் நாளாந்தம் ஊடக சரிசீரான செய்திகளை வழங்குகின்றது.



ஐப்பசி மாதத்தில் மாதத்தில் FCSU தலைவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து (அந்தொனி எமிலியாம்பிள்ளைAnthony), கிளிநொச்சி (யோசெப் பிறான்ஸிஸ்), மன்னார் (N. M. அலம்) மற்றும் முல்லைத்தீவு (மரியதாஸ்) தலைவர்கள் துண்டுப்பிரசுரம் சுவரொட்டி மற்றும் தபால் அட்டை பிரசாரத்தை இலங்கைக் கடற்பரப்பில் தமிழ்நாட்டு இழுவைப்படகுகளால் IUU மீன்பிடித்தலை நிறுத்துவதற்காக ஆரம்பித்தார்கள். 13,000 தபால் அட்டைகள் இலங்கை ஜனாதிபதி , பிரதம மந்திரி, எதிர்கட்சித் தலைவர், கடற்றொழில் அமைச்சர் , முதலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டன. இலங்கைக் கடற்பரப்பில் தமிழ்நாட்டு வள்ளங்களால் IUU முறை மீன்பிடித்தலை உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு US, UK மற்றும் EU ஆகியவற்றின் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் தபால் அட்டைகள் அனுப்பப்பட்டன.



ஊவா வெலெசெ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அன்பன் சூசை மன்னார் மாவட்டத்தில் சிறு அளவிலான மீனவர்களின்மேல் தமிழ்நாட்டு இழுவைப்படகுகளின் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய அவரது கற்கையை நிறைவேற்றினார். நீரியல் வளங்கள் மற்றும் ஏற்றுமதி பயிர் தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த Ms. இந்திக விக்கிரமரத்தின அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்டார். மன்னார் மாவட்டத்தில் சிறிய அளவிலான மீனவர்களின்மேல் பொருளாதாரத் தாக்கங்களின் இறுதி அறிக்கையும் ஆராய்ச்சிக் கட்டுரையும் 2016 பங்குனி மாதத்தில் வெளியிடப்படும். அன்பனின் இறுதி அறிக்கை மற்றும் அவரது கண்டுபிடிப்புகள் அடுத்த நீல நீச்சல் நண்டு அறிக்கையில் ஆராயப்படும்.

[1] https://www.facebook.com/STOP-Indian-Trawlers-1664473020454507/timeline/?ref=bookmarks

## சமூக மற்றும் பொருளாதார சமத்துவம்



FIP களுக்கான சர்வதேச படிமுறைகளும் நிலையான வளமான கடலுணவும் 'நிலையான முகாமை செய்யப்பட்ட' இன்னமும் சமூக மற்றும் பொருளாதாரப் பிச்சினைகளையும் கையாளவேண்டியுள்ளது. SLSBC FIP இன் அங்கத்துவர்கள் (அதாவது., உற்பத்தியாளர்கள் ,செய'முறைப்படுத்துனர் மற்றும் ஒழுங்குவிதிப்படுத்துனர் ) கடற்றொழிலின் உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் அந்தஸ்தை முன்னேற்றுவதற்கும் கடற்றொழிலின் நிலையான தன்மையை பராமரிக்கவும் இணைந்த முகாமைத்துவப் படிகளை இடத்தில் வைக்கவும் அர்ப்பணிக்கின்றார்கள். FIP இன் அங்கத்தவர்கள் சமமாக கடற்றொழிலுக்கான முன்னேற்றங்களிலிருந்து எழும் எல்லா நன்மைகளும் BSC மீனவ சமூகங்கள் , BSC உற்பத்தியாளர்கள் (மற்றும் அவர்களது ஊழியர்கள்)மற்றும் இலங்கை அரசாங்கம் என்பவைக்கு இடையில் சமமாகப் பகிரப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தி அர்ப்பணிக்கபடுகின்றது.

கடற்றொழிலின் சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தை முன்னேற்றுவதற்கு கடந்த ஆறு மாதங்களாக பூநகரி FCSU ஆல் வெற்றிகரமாக இரண்டு உப செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கூட்டுறவு அபிவிருத்திப் பயிற்சி , கூட்டுறவு புத்தகத் தொகுதி மற்றும் வங்கித்தொழிற்பாட்டு ஆதரவூடாக முதலில் பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் 11 FCS முகாமைத்துவ மற்றும் நுண் முயற்சி அபிவிருத்தி இயலளவு அதிகரிக்கப்பட்டன. எல்லா 16 FCS களும் இப்போது FCSUஆல் 'செயலாற்றுபவையாக' வகைப்படுத்தப்படுகின்றன. பூநகரி FCSU இன் கீழ் எல்லா FCS களும் தங்களது அங்கத்தவர்களுக்கு கூட்டுறவு சங்க புத்தகங்களை பராமரிக்கவும் நிர்வகிப்பதுடன் ஆகக்குறைந்தது ஒரு 'சேவையை' வழங்கவும் இப்போது லிகிதர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். கடற்றொழில் துறைக்குத் தொடர்பான நுண் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு 11 இல் முதல் அணியிலுள்ள FCS களுக்கு மானியங்களும் பயிற்சியும் FCSU ஆ் வழங்கப்பட்டன. எல்லா ஆறு சங்கங்களும் இப்போது நுண் முயற்சி தொடர்பான ஏதோ சில வடிவக் கடற்றொழிலில் ஈடுபடுகின்றன (அதாவது., கடலுணவு அல்லது நுண் எரிபொருள் என்பவற்றை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலுக்குமான நிலையம்).

## SLBSC கடற்றொழில் / FIP அந்தஸ்து அறிக்கை

2015 மார்கழி மாதத்தில் நிலையான வளமாக்கப்பட்ட கடலுணவுக்காக மூன்று சர்வதேச ரிதியாக அங்கீகரிக்கப்பட்ட படிமுறைகளுக்கு எதிராக SLBSC கடற்றொழிலின் அந்தஸ்தை மதிப்பீடு செய்வதற்காக ஆறு மாதாந்த 'உள்ளக மதிபீட்டு செய்முறையை FIP ஆரம்பித்தது. இந்த மதிப்பீடுகள் உத்தியோகபப்பற்றற்றவை /உள்ளகமானவை / கடற்றொழில் அந்தஸ்தின் FIP தங்கியுள்ள மதிப்பீடகளாகும். விளைவுகள் பின்வரும் கருத்துக்களைத் தருகின்றது :

FIP இப்போது **படி 3 இல்:** அமுலாக்கம் - முன்னேற்றங்களுக்கு தைரியமூட்டல்

கடற்றொழிலின் MSC இனது கடற்றொழில் மதிப்பீட்டு வழிமுறைக்கு எதிராக கடற்றொழிலின் புள்ளிகள் (v2.0) **0.37** ஆகும். நிலையான கடற்றொழிலுக்கான MSC இனது நியமத்தை **தோல்வி** அடையச்செய்யுமென The FIP இனது உள்ளக மதிப்பீடு கருத்து வழங்குகின்றது.

பிடிபடும் கடற்றொழிலின் கடலுணவு காவல்செய்யும் விதிமுகைக்கு எதிராக கடலுணவுக்கான முழு புள்ளியும் (v2.0) **2.12** ஆகும். கடற்றொழில் **சிவப்பாக** அணிசெய்யப்படும் என்பதுடன் கடலுணவு காவல் SLBSC உற்பத்திகளைத் **தவிர்ப்பதற்கு** நுகர்வோருக்கு சிபார்சு செய்யும் என FIP இன் உள்ளக மதிப்பீடு ஆலோசனை தருகின்றது..

***2016 இல் FIP ஐ முன்னெடுத்துச் செல்லல் : மேலே விபரிக்கப்பட்ட*** SLBSC கடற்றொழிலுக்கான முன்னேற்றங்கள் தேசிய கடற்றொழில் நிறுவக நண்டு பேரவையின் தாராளமான நிதி உதவியின்றி சாத்தியமாக வந்திருக்காது. (*SEASL மைய நிதி செய்தல்*). பொருளாதார அபிவிருத்தி செயற்றிட்டம் (LEED) (*FCSU உடன்*), *வங்காளவிரிகுடா கடல்சார் சுற்றுச்சூழல் நிகழ்ச்சி* (*DFAR உடன்*) மற்றும் ஆசிய மன்றம்and (*FIP* உடன்) என்பவற்றின் ஊடாக சர்வதேச தொழில் நிறுவனத்தின் உள்நாட்டு அதிகாரமும் FIP இன் வெற்றிகரமான அமுலாக்கத்துக்கு தாராளமாகப் பங்களித்தது. SLBSC கடற்றொழிலை முன்னேற்றுவதற்காக எல்லா முயற்சிகளுக்கும் FIP இன் அங்கத்தவர்கள் இந்த நிறுவனங்களுக்கும் அவற்றின் பணியணியினருக்கும் அவர்களின் தொடர்ந்து செய்த உதவி, புரிந்துணர்வு மற்றும் பொறுமைக்காக நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

2015 இல் தப்றொபென் கடலுணவு குழுமம் (Pvt) லிமிட்டட் கடல் உறைய வைக்கப்பட்ட உணவுகளின் Chicken உடன் **இணைந்து** FIP இலங்கை நீல நீச்சல் நண்டுக்கு இணை நிதி வழங்கியது. Alpex Marine (Pvt) லிமிட்டட், Ceylon Catch (Pvt) லிமிட்டட், Ceylon Foods (Pvt) லிமிட்டட், OLS Foods (Pvt) லிமிட்டட் மற்றும் and Prawn Ceylon (Pvt) லிமிட்டட் என்பன FIPஇலங்கை நீல் நீச்சல் நண்டின் அங்கத்தவர்களாகும்..

*நீல நீச்சல் நண்டின் அறிக்கைகளின் மென் பிரதிகள் ஆங்கிலம் , சிங்களம் மற்றும் தமிழிலும் பிரதான FIP ஆவணங்களும் SEASL வலையமைப்பில் (www.seasl.lk) கீழிறக்கம் செய்யப்படமுடியும் . FIPபற்றிய மேலும் விபரங்களுக்கு steve@pelagikos.lk தயவுசெய்து மின்னஞ்சல் செய்யவும்.*